**58 வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்**

வைகையாற்றின் கரையில்  திருவாதவூர் என்னும் ஊரில் சம்பு பாதசரிதருக்கும், சிவஞானவதிக்கும் வாதவூரான் என்ற ஓர் மகன் பிறந்தான். பதினாறு வயதிலேயே வேதம் முதல் அறுபத்து நான்கு கலைகளையும் வாதவூரான் கற்றுணந்தான். படைக்கலைப் பயிற்சியையும்,நீதி சாஸ்திரங் களையும் கற்றுணர்ந்த அவனை தன் முதல் மந்திரியானான் அரிமர்த்தன பாண்டியன் வாதவூரான் அரசியலில் ஈடுபட்டிருக்கும் போதே அவனுள் உலகில் மெய் பொருளை அடையும் வழிகளை ஆராய்ந்து வரலானான். இறைவனிடம் அன்புக் கொண்டு அவனின் திருவருளைப்பெற்றால் தான் வீடுப்பேற்றை அடைய முடியும் என்பதை உணர்ந்தான். சாஸ்திரத்தில்வல்லோரைசந்தித்துமெய்பொருளைபற்றி ஆராய்ந்தும்அவைஅவன் மனத்தில் நிலைக்கவில்லை. சிவபெருமானி டம் கொண்ட பேரன்பே பதிந்திருந்தது. தன் கடமையையும்செய்து மன்னனின் நன்-மதிப்பைப் பெற்றான்.

குதிரைக் காவலாளர்கள் மன்னனிடம் வந்து வைகையாற்றின் வெள்ளத்தால் பல குதிரைகளும், நோய்வாய்ப்பட்டு பல குதிரைகளும் இறந்து விட்டதாகக் கூறினர். பாண்டியன் வாதவூரானிடம்கருவூலத்தி லிருந்து பொருள் எடுத்துக் கொண்டு நல்ல குதிரைகளாக வாங்கி வரும் படிபணித்தார். வாதவூரானும் பொருள் எடுத்துக் கொண்டு அரசரிடம் விடைப் பெற்றுக் கொண்டுகுதிரைகள் வாங்க புறப்பட்டான் .

திருக்கோயிலுக்குச்சென்றுஐயனைவணங்கிதான்கொண்டுவந்துள்ள பொருள்கள்அனைத்தும்அடியார்களுக்குப்பயன்படும்படிஅருளும்படி வேண்டினான். ஐயன் ஆதிசைவர் போல் வடிவுக் கொண்டு வாதவூரானுக்கு திருநீறு கொடுத்து அருளினார்.

ஐயன் திருப்பெருந்துறையில் ஒரு குருந்த மரத்தடியில் குருவாய் அமர் ந்திருந்துவேதத்தைபோதித்துக்கொண்டிருந்தார். அங்குவந்தவாவூரான் ஐயனை வணங்கினான். ஐயன் வாதவூரானின் சிரம் மேல் கை வைத்து பஞ்சாக்ஷரத்தை ஓதினார். வாதவூரான் ஐயனுக்கு பாமாலை பல சூட்டினான். மகிழ்ந்த ஐயன் அவனுக்கு மாணிக்கவாசகன் எனும் திருநாமத்தைச்சூட்டினார்.

மாணிக்கவாசகனிடம், இன்னும் பல பாமாலைகள் இயற்றவும் சமணர்களை வாதத்தில் வெல்லவும் இன்னும் சில காலம் அவ்வூரில் , அடியார்களோடு மறைத்தார் ஐயன்.

**பல்லவி**

அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூராரை
முதல் மந்திரியாய் கொண்டு அரசாட்சி செய்தான்

**அனுபல்லவி**

பரிக்கான பொருளை பணிக்காக பணித்திடவே
பெருந்துறை குருந்த மரத்தடியில் ஆசானாய் அமர்ந்தீர்

**சரணம்**

திருக்கரத்தை சிரசில் வைத்து உய்க்கும் பஞ்சாக்ஷரத்தை
ஓதி மாணிக்கவாசகன் என்ற பெயர் சூட்டினீர்
திருமுகத்தைக் கண்டு பயந்த வாசகனுக்கு
வரும் குதிரை என்று பதில் ஓலை அனுப்பச் சொன்னீர்